கும்பகோணம் நகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

## நாள் : 10.08.2018

# 10.08.2018ம் தேதிய நகர்மன்ற சாதாரண கூட்ட பொருள்கள்

<table>
<tr><th>வ.எண்</th><th>பொருள்கள் – ஆகஸ்ட் 2018</th><th>தீர்மானம் எண்</th></tr>
<tr><td>1.</td><td>இந்நகராட்சி பொதுப்பிரிவில் இரண்டு தட்டச்சர் பணியிடங்கள் காலியாக உள்ளதால், பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, கணக்கு, தேர்தல் மற்றும் தணிக்கைபிரிவில் கணிணி இயக்குபவர் தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பெறப்பட்ட அனுமதி 30.06.2018ன் உடன் முடிவடைகிறது. மேலும் பொதுப்பிரிவு, பொதுசுகாதாரப்பிரிவு, நகரமைப்பு பிரிவு, கணக்கு பிரிவு, சத்துணவு பிரிவு அனைத்து பிரிவு தபால்கள், அறிக்கைகள், மின்னஞ்சல் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் தயார் செய்து அனுப்ப வேண்டியுள்ளதாலும், மேலும் பல்வேறு பணிகள் உள்ளதாலும், இந்நகராட்சியில் கணிணி இயக்குவோர் (Computer Operator) இல்லாததாலும், தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ளதாலும், அனைத்து பணிகளையும் ஒருங்கிணைத்து செய்திட அவசர அவசியத்தினை முன்னிட்டு நிர்வாக நலன் கருதி, மாவட்ட ஆட்சித்தலைவர் செயல்முறைகள் ந.க.15216/2017/ஜி2, நாள்.21.06.2017ன்படி ஒப்பந்த பணியாளர்களுக்கு விலைவிகிதத்தில் மாற்றம் செய்துள்ளபடியால், மாவட்ட ஆட்சித்தலைவர் விலை விகிதப்படி ரூ.333/– வீதம் ஊதியம் நிர்ணயம் செய்ய பொதுப்பிரிவில் இரண்டு நபரையும், பொறியியல் பிரிவிற்கு ஒரு நபரையும் தணிக்கை பிரிவில் ஒரு நபரையும் தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் (Out Sourcing) மூலம் பணியில் அமர்த்திக்கொள்வதற்கு ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மான எண்.289, நாள்.27.01.2012ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 30.06.2018 உடன் முடிவடைந்துவிட்டதால், 01.07.2018 முதல் 31.08.2018 வரை நான்கு நபர்களுக்கு மட்டும் இரண்டு மாதங்களுக்கு மட்டும் கால அவகாசம் நீட்டிப்பு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>தீர்மான எண்.118 அனுமதி வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>2.</td><td>கும்பகோணம் நகராட்சி வார்டு எண்.6, பிளாக் எண்.17, நகரளவு எண்.1019 நகராட்சி நிலம் தொடர்பாக கும்பகோணம் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் திரு.மணிமாறன் என்பவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண்.140/2014க்கு நகராட்சி சார்பாக வாதாடியமைக்காக வழக்காடு கட்டணம் ரூ.15950/– திரு.பலராமன், வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>தீர்மான எண்.119 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>3.</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.F.5739 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு தேவையான டயர், டியூப் வாங்கும் பொருட்டு நகர்மன்ற தீர்மான எண்.8, நாள்.18.4.2018ல் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் முடிவுக்காக பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>1.</td><td>K.B.R டயர்ஸ்<br>12G, நீடாமங்கலம் ரோடு, கும்பகோணம்</td><td>ரூ.73550/–</td></tr>
<tr><td>2.</td><td>SANA டயர்ஸ்<br>14, செட்டிமண்டபம் ரோடு, அம்மாச்சத்திரம், கும்பகோணம்</td><td>ரூ.76600/–</td></tr>
</table></td><td>தீர்மான எண்.120 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
<tr><td>4.</td><td>இந்நகராட்சியை எதிர்த்து குளங்கள் சீர்செய்தல் மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுமாறு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட கீழ்கண்ட வழக்குகளுக்கு திரு.எம்.ராஜராஜன் மற்றும் திரு.பி.சீனிவாஸ், வழக்கறிஞர் கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எண்</th><th>வழக்கு எண்</th><th>வழக்கு விபரம்</th><th>வழக்கறிஞர் பெயர் திருவாளர்கள்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>W.P (MD) No.8285 / 2018</td><td>திரு.செந்தில்குமார் 5ஏ, வடக்கு வள்ளுவர் தெரு இடம் ஆக்கிரமித்துள்ளதை மீட்டு தருவது தொடர்பாக</td><td>எம்.ராஜராஜன்</td><td>10000/–</td></tr>
</table></td><td>தீர்மான எண்.121 அனுமதி அளிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td><table>
<tr><td>2.</td><td>W.P (MD) No.8626 / 2018</td><td>சி.பவுன்ராஜ், சர்வே எண்.2100/6 மேலக்காவேரி இடம் அளப்பது தொடர்பாக</td><td>எம்.ராஜரா ஜன்</td><td>10000/-</td></tr>
<tr><td>3.</td><td>W.P (MD) No,31720 / 2015</td><td>குளங்களை சீர் செய்வது மற்றும் நகர பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக</td><td>எம்.ராஜரா ஜன்</td><td>15000/-</td></tr>
</table></td><td></td></tr>
<tr><td>5.</td><td>சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 23.07.2018 ஆம் தேதிய ந.க.எண்.20555/2018/ஆர்1 எண்ணிட்ட கடிதத்தில் அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (MA IV) நாள்.19.07.2018ல் உள்ளாட்சி நிதி அமைப்புகளுக்கு பொதுவரி சீராய்வு கீழ்கண்ட விகிதாசாரம்படி செய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது.<br><table>
<tr><th>Description</th><th>Proposed revision of property tax</th></tr>
<tr><td>1. Residential Buildings</td><td>Not more than 50%</td></tr>
<tr><td>2. Rented Residential buildings</td><td>Not more than 100%</td></tr>
<tr><td>3. Non Residential buildings</td><td>Not more than 100%</td></tr>
</table><br>சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 30.07.2018 ஆம் தேதிய ந.க.எண்.2055/2018/ஆர்1 எண்ணிட்ட கடிதத்தில் அரசு ஆணை.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (MA IV) நாள்.26.07.2018ன் படி வரிசை எண்.2 வாடகை குடியிருப்புக்கு உள்ள சொத்து வரிக்கு சொத்து வரி சீராய்வு இல்லை என நீக்கம் செய்யப்பட்டதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்க ஆணையரின் அனுமதிக்கு.</td><td>தீர்மான எண்.122 அனுமதி அளிக்கப்பட்டது</td></tr>
<tr><td>6.</td><td>இந்நகராட்சி பாதாள சாக்கடைத் திட்ட ஆளிறங்கு கிணறுகளில் பணியாளர்கள் இறங்கி பணியாற்றுவதை தவிர்க்கும் வகையில் தானியங்கி இயந்திரம் Bandy coot – A Robot-ஐ கும்பகோணம் சார் ஆட்சியர் அவர்களின் பரிந்துரையின் பேரில் இந்தியன் ஆயில் கார்போரேசன் லிமிடெட்., நிறுவனத்தாரின் CSR நிதியிலிருந்து ரூ.9,44,000/-மதிப்பீட்டில் திருவனந்தபுரம் Genrobotic Innovation Pvt., Ltd., நிறுவனத்தாரிடமிருந்து வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு</td><td>தீர்மான எண்.123 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>7.</td><td>கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 44 முத்துகிருஷ்ணன் நகர் பகுதியில் AMRUT 2017-20 திட்டத்தின் கீழ் பூங்கா மேம்படுத்துதல் பணி மேற்கொள்ளப்படும் இடத்தில் தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் லிமிடெட், துறையால் நிறுவப்பட்ட உயர் மின்னழுத்தம் கொண்ட மின் கேபிள்கள் மிகவும் தாழ்வாகவும், குறுக்கு நெடுக்கிலும், பக்கவாட்டிலும் உள்ளன. இம் உயர்மின் அழுத்த கேபிள்களினால் பணி மேற்கொள்ளப்படும்பொழுதும், பணி முடிவுற்றபின் பொதுமக்களால் உபயோகப்படுத்தும்பொழுதும் பேராபத்துகள் ஏற்படா வண்ணம் தடுக்கும் வண்ணம் இம்மின் கேபிள்களை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. இப்பணிக்கு தமிழ் நாடு மின் வாரியத்தினால் அளிக்கப்பட்ட மதிப்பீடு கேட்பு பட்டியல் படி தொகை ரூ.91,740/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>தீர்மான எண்.124 அனுமதி அளிக்கப்பட்டது</td></tr>
<tr><td>8.</td><td>இந்நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யும் பணிக்கு விலைப்புள்ளிகள் கோரியதில் குறைந்த விலைப்புள்ளியாக DPR மதிப்பீட்டில் 0.95% சதவிகிதம் மற்றும் GST கட்டணத் தொகையாக கொடுத்த சென்னை பவித்ரா அசோசியேட்ஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை நகர் மன்றம் தனது 28.03.2018ம் தேதிய தீர்மானம் எண் 461ல் அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி நிறுவனத்தினர் தற்பொழுது இந்நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து கொடுத்துள்ளனர். இதன்படி Lumpsum தொகை நீங்கலாக மதிப்பீட்டுத் தொகை ரூ.4,40,00,000/- ஆகும். இதன் அடிப்படையில் சென்னை பவித்ரா அசோசியேட்ஸ் நிறுவனத்தாருக்கு நகராட்சி வருவாய்</td><td>தீர்மான எண்.125 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
</table>

நிதியின் கீழ் பட்டியல் தொகை கீழ்க்கண்டவாறு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| | | |
|---|---|---|
| 1. | L.S. நீங்கலாக மதிப்பீட்டுத் தொகை | ரூ.4,40,00,000/– |
| 2 | விலைப்புள்ளி விபரப்படி தொழில்நுட்ப ஆலோசருக்கான கட்டணத் தொகை (DPR மதிப்பீட்டில் 0.95% சதவிகிதம்) | ரூ.4,18,000/– |
| 3 | GST @ 18% | ரூ.75,240/– |
| 4 | கூடுதல் பட்டியல் தொகை | ரூ.4,93,240 |

9. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்கண்ட பணிகள் மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண் | மதிப்பீட்டு எண்/ கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | செலவினம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | Roc.No. 16862/2016/E3 | Rectification of repair works of replacing of 12V-65AH batteries for Engineering section in Kumbakonam MUnicipality | 1,10,000 | 1,08,090 |
| 2. | Roc.No. 11370/2016/E3 | Supply, delivery and fixing of 12V-150 AH battery rechargeable at Bio methanation in Karikulam. | 49,000 | 48,350 |

**தீர்மான எண்.126 மன்றம் பதிவு செய்யப்பட்டது.**

10. கும்பகோணம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக கீழ்காணும் ஐந்து இடங்களில் ரூ.428.10 இலட்சம் மதிப்பீட்டில் நுண்ணுயிர் உரமாக்கும் மையங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 4.7.2018–ம் தேதியன்று பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் |
|---|---|
| 1. | வார்டு எண்.7, பெரிய தம்பி நகரில் 3 TPD கொள்ளளவு கொண்ட புதிய நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணி |
| 2. | வார்டு எண்.12, சோலையப்பன் தெருவில் 4 TPD கொள்ளளவு கொண்ட புதிய நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணி |
| 3. | வார்டு எண்.15, அறிஞர் அண்ணா தினசரி மார்க்கெட் வளாகத்தில் புதிய 5 TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணி |
| 4. | வார்டு எண்.21, பாணாதுறை பாதாள சாக்கடை கழிவு நீரேற்று நிலைய வளாகத்தில் 4 TPD கொள்ளளவு கொண்ட புதிய நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணி |
| 5 | வார்டு எண்.24, பாரத் நகர் பாதாள சாக்கடை லிப்டிங் ஸ்டேஷன் வளாகத்தில் 4 TPD கொள்ளளவு கொண்ட புதிய நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணி |

திடக்கழிவு மேலாண்மையின் அவசியம் கருதி மேற்கண்ட பணிகளை அரசு மானிய நிதியினை எதிர்நோக்கி நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் அதனை நகராட்சி நிதிக்கு ஈடுசெய்துகொள்ளவும் மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி நகராட்சி

**தீர்மான எண்.127 அனுமதி அளிக்கப்பட்டது**

<table>
<tr>
<td></td>
<td>ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு மேல் நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது.<br>மேற்குறிப்பிட்ட ஐந்து இடங்களில் புதிய நுண்ணுயிர் உரமாக்கும் மையக்கட்டிடங்கள் கட்டப்படவுள்ளவைகளின் தளங்களை மண் பரிசோதனை செய்து தரவும், மண் பரிசோதனை ஆய்வு முடிவுப்படி கட்டிட வடிவமைப்பு தயாரித்ததை ஆய்வு செய்து சான்றளிக்கவும், திண்டுக்கல் அண்ணா பல்கலைக்கழக தொழில் நுட்ப கல்லூரிக்கு ரூ. 2,06,500/– நகராட்சி நிதியிலிருந்து செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td></td>
</tr>
<tr>
<td>11.</td>
<td>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–19ன் கீழ் இந்நகராட்சி வார்டு எண் 44, மாரியம்மன் கோவில் சாலை மயானத்தில் புதிய ஆழ்குழாய் அமைத்து தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு ரூ.3.00 இலட்சத்திற்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க. எண் 1303/2018/அ2, நாள் 24.06.2018ல் நிர்வாக அனுமதி வழங்கியதன் பேரில் இப்பணிக்கு 13.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டின்ப டி ஒப்பந்தத் தொகை ரூ.</th><th>ஒப்பந்த தாரரின் ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ.</th><th>சதவீத விபரம் ரூ.</th></tr>
<tr><td>1</td><td>திரு.எம்.காளிதாசன், 6/443 கம்பட்ட விஸ்வநாதர் கோவில் கிழக்கு தெரு, கும்பகோணம்.</td><td>226223.86</td><td>228790</td><td>மதிப்பீட்டை விட 1.13% சதவிகிதம் கூடுதல்</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.செல்வம், 2/443, மெயின் ரோடு, திருவலஞ்சுழி.</td><td>226223.86</td><td>225990</td><td>மதிப்பீட்டை விட 0.10% சதவிகிதம் குறைவு.</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்.128 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>12.</td>
<td>மாவட்ட ஆட்சியர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர் அவர்களின் 7.11.2016–ம் தேதியிட்ட ந.க. எண் 9438/2016/அ2 செயல்முறை உத்தரவுகளில் மேலக்கொட்டையூர் குளத்திற்கு உள்மடை வெளிமடை அமைத்து மழை நீர் சேகரிப்பு அமைத்து படித்துறை கட்டும் பணிக்கு ரூ.78.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. நகர் மன்ற தீர்மானம் எண்.109 நாள் 22.12.2016–ல், 22.12.2016 அன்று இப்பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டைவிட 4.95 சதவிகிதம் கூடுதலாக வரப்பெற்ற திரு.என்.சரவணன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க அனுமதி வழங்கியதன்பேரில் அன்னாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதுவரை செய்து முடிக்கப்பட்ட பணிகளின் மதிப்பு ரூ.78,49,227/– ஆகும். எனவே இப்பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.78.00 இலட்சம் போக கூடுதலாகும் தொகை ரூ.49,227/–ஐ வருவாய் நிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு</td>
<td>தீர்மான எண்.129 அனுமதி அளிக்கப்பட்டது</td>
</tr>
</table>

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**